பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 13 சனிக்கிழமை 30.09.2023 கதிர் 323

### முல்லைத்தீவு நீதிபதிக்கு விடுக்கப்பட்ட

# அச்சுறுத்தலை கண்டித்து தொடர் போராட்டங்கள்

### 6 தமிழ்க் கட்சிகள் அறிவிப்பு

(ந.லோகதயாளன்.)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாதனது அனைத்துப்பதவிகளையும் துறக்குமளவிற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கத் தொடர் போராட்டங்களை நடத்துவது என்று 5தமிழ்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்றுச் சந்தித்த தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், தமிழ் மக்கள் கூட்டணி, ஈபிஆர்எல்எவ், ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

நீதிபதி ரி.சரவணராஜாவின் திடீர் பதவி விலகலால் ஆளும் தரப்பு வட்டாரங்கள் ஆடிப்போயிருக்கின்றன என்கின்றன கொழும்புச் செய்திகள். சத்தம் சந்தடி எதுவும் இன்றி நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் ஏற்படுத்திய அதிர்வலையை ஒத்த அதிர்வுகள் ஆளும் தரப்புக்குள் ஊடுருவியுள்ளன என்கின்றன தகவல்கள்.

நீதிபதிக்கு அழுத்தம் கொடுத்த தரப்புக்கள் அவரிடமிருந்து இப்படியொரு எதிர்வினை கிளம்பும் என்று எதிர்பார்த்திருக்கமாட்டார்கள் போலும். வழக்கம்போல, பதவி உயர்வுகள் படி உயர்வுகள் என்ற ஆயுதங்களை வைத்து எப்படியும் அவரையும் வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்று அல்லது அவராகவே வழிக்கு ☞2

## பாதுகாப்பு குறைப்பு இல்லையாம்

நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு குறைக்கப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்தூவ தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிபதி ரி.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளமைதொடர்பில், கருத்து வெளியிடும்போது ☞2

## கிளிநொச்சியில் திங்கட்கிழமை நீதிபதிக்கு ஆதரவாக போராட்டம்

நீதித்துறையின் இயங்குநிலையை உறுதிப்படுத்த ஒன்றிணைய வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா, தனது பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப் படுமளவுக்கு, அவருக்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், திங்கட்கிழமை, காலை.9.30 மணிக்கு, கிளிநொச்சி பழையகச்சேரி முன்பாக நடைபெறவுள்ள கண்டனப் போராட்டத்தில் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் மாவட்டக் கிளை வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஈழத்தமிழர்களின் மரபுவழித் தாயகப் பகுதியான குருந்தூர் மலையின் இருப்பையும், அங்கு தமிழர்கள் வழிபாடியற்றும் ☞2

## நீதிபதிக்கான அச்சுறுத்தல் குறித்து உடனடியான விசாரணை வேண்டும்

### சட்டத்தரணிகள் சங்கம் வ லியுறுத்து

முல்லைத்தீவு மாவட்டநீதிபதிரி.சரவணராஜாவுக்கு ஏற்பட்டுள்ள உயிரச்சுறுத்தல் தொடர்பில் உடனடியான விசாரணைகளை முன்னெடுக்குமாறு குற்றப் புலனாய்வு பிரிவை கோருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தான் வகித்த பதவிகள் அனைத்தையும் துறந்து உயிரச்சுறுத்தல் மற்றும் மனஅழுத்தம் காரணமாக நாட்டை விட்டுவெளியேறுவதாக அறிவித்துள்ளார். அது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ☞2

## சரத்வீரசேகரவின் அச்சுறுத்தல் குறித்தும் விசாரணை அவசியம்

### முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்து

முல்லைத்தீவு நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது யாரால் என்பது கண்டறிப்பட வேண்டும். ஏற்கனவே சரத்வீரசேகர முல்லைத்தீவு நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுத்தது தொடர்பில் முழுமையாக விசாரணை நடத்த வேண்டியது அவசியமாகின்றது. இந்த விடயத்தினை வெறுமனே கடந்து செல்ல முடியாது.

இவ்வாறு முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று ☞2

## இளைய தலைவரிடம் மொட்டின் தலைமை

### மகிந்த தெரிவிப்பு

எனதுஉடல்நிலைக்கு எந்தப்பாதிப்பும் இல்லை என்று தெரிவித்துள்ள முன்னாள்ஜனாதிபதியும், பொது ஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ பொது ஜன பெரமுவின் தலைமைத்துவத்தைப் இளையவரிடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

களனி ரஜமஹா விகாரைக்கு ☞2

## வரி செலுத்துவது பொதுமக்களின் கடமையாம்

வரி செலுத்துவது பொதுமக்களின் கடமையென்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் வரி செலுத்துவது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரிசெலுத்துதல்பொதுமக்களின் அடிப்படையானகடமையாகின்றது. வரியைப் பெற்றுக் கொள்வது பிரதான அரச வருமானமாகக் ☞2

## இரு சந்திப்புக்கள்

அனைத்துலக இராஜதந்திரக் கட்டமைப்பின்(ஒழுங்கமைப்பில் நேற்று பின்லாந்தில்த இருவேறு முக்கிய சந்திப்புகள் நடைபெற்றுள்ளன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் பின்லாந்து நாடாளுமன்றத்தின்வெளியுறவுக் குழுவின் தலைவர் கிம்மோ கில்ஜுனென் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜூஸ்ஸி சரமோ மற்றும் வெய்ஜோ நிமி ஆகியோருக்குமிடையில் இச்சந்திப்பு இடம்பெற்றது..

மற்றுமொரு சந்திப்பு, பின்லாந்து நாடாளுமன்றத்தின் மனித உரிமைகள் சார்ந்த விடயங்களைக் கண்காணிக்கும் வலையமைப்பின் பிரதித் தலைவர் எம்.பி வெரோனிகா ஹொன்கசலோவுடன் நடைபெற்றது. ☞2

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியமும் கண்டனம்

இனப்படுகொலைக்கான சர்வதேச நீதிக்கு வலுச் சேர்க்க முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜாவின் பதவி விலகல்வழிகோலுவதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டநீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைக் கண்டித்து

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

''முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா 23.09.2023 அன்று திகதியிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக, உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் தொடர் அழுத்தங்கள் காரணமாகதான் வகித்து வந்த அனைத்து நீதிபதிப் பொறுப்புக்களில் இருந்தும் விலகியுள்ளார். நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்'' என்னும் செய்தி வெளிவந்து நீதித்துறையின் நம்பகத்தன்மை குறித்து மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குருந்தூர் மலை வழக்கில் உண்மையினை நிலைநாட்டுவதற்காக நடுநிலையுடனும் நீதியுடனும் செயற்பட்டுவந்த நீதிபதி ரி.சரவணராஜா தனது உயிருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் மற்றும் தொடர் அழுத்தங்கள் காரணமாக பதவியிலிருந்து விலகி நாட்டைவிட்டு வெளியேறியமை சிறிலங்கா நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மீது விழுந்த மற்றுமொருகரும்புள்ளி.

குருந்தூர்மலை வழக்கில் தொல்பொருட் பிரதேசத்தில் நீதிமன்ற உத்தரவினை மீறி விகாரை கட்டுமானம் தொல்பொருள் பணிப்பாளரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதென அண்மையில் ☞8

## கடன் வாங்கி உண்பது மட்டும் என்றால் 10 ஆண்டுகளில் ஒன்றுமே இருக்காது

### அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவிப்பு

கடன்வாங்குவதும் உண்பதுமாகஇருந்தால் இன்னமும் பத்து ஆண்டுகளில் சாப்பிடுவதற்கேவழியில்லாத நிலைமைதான் உருவாகும் என்று அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாணய நிதியம் இரண்டாவது கடன்தொகையைவழுங்குவதற்கான கால எல்லையை குறிப்பிடவில்லை. அது காலதாமதமாகலாம் என்று கூறியுள்ளது.

ஆகவே, கடன் தொகையைப் பெறுவதற்காக அடுத்ததாக, உள்நாட்டு வரிவருமானத்தினை அதிகரிக்க வேண்டியுள்ளது. ☞2

## திருமுறிகண்டியில் புத்தர் சிலை வைக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு



முல்லைத்தீவுமாவட்டம், திருமுறிகண்டி செல்வபுரம் சிவன் கோவில் காணியில் புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கை பொது மக்கள் எதிர்ப்பை அடுத்துக் கைவிடப்பட்டது

இந்தப் புத்தர் சிலையை அந்தப் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவதே அங்கு வைக்க முயற்சித்தார் என்று தெரிவிக்கப் பட்டது. கிராம மக்களின் எதிர்ப்பினால் பின்னர் அவர்அந்தமுயற்சியைக் கைவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. லும் தெரியவருவதாவது

சிவன் கோவிலுக்குரிய காணியில் அந்த ஊடகவியலாளரும் ☞8

காலைக்கதிர்
Kalaikkathir

### இனி இது .....

வந்து விடலாம் என்று மிக இலகுவாகக் கருதிக் கையாண்டிருப்பார்கள் போலும் அதனால்தான் இப்போது பேரதிர்ச்சிக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

அதன் விளைவாக என்ன செய்வதென்று தெரியாது வழக்கம்போல் அவசர அவசரமாக தவறு நீதிபதியினுடையது என்று பழியைத்திருப்பும்வகையில் கருத்துக்களைக் கூறத் தொடங்கியிருக்கிறார்கள். நீதி அமைச்சர்விஜேதாசராஜபக்ச ஊடகங்களுக்கு நேற்று வழங்கியவிளக்கத்தில்நீதிபதி சரவணராஜாபிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டு 5 வழக்குகள் இருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்.

நீதிபதி ஏதோ குற்றம் இழைத்தவர் போன்றும் அதற்குப் பயந்துகொண்டு அவர் வெளியேறிவிட்டார் என்பதைப் போன்றும் அர்த்தப்படும்படி அவரது கருத்து அமைந்திருக்கிறது. உண்மையில் நீதிபதி பிரதிவாதியாகக் குறிப்பிடப் பட்டிருக்கும் வழக்குகள் அவரது தொழில்முறை சார்ந்து அவர் வழங்கிய கட்டளைகள், தீர்ப்புகளை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்பட்டவையே தவிர தனிப்பட அவருக்கு எதிரானவை அல்ல.

கீழமை நீதிமன்றங்களின் முடிவுகளை எதிர்த்து மேல் நீதிமனங்களில் மேன்முறையீடு செய்யப்படுவதும் அவற்றில் பல வழக்குகளில் நீதிபதிகள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்படுவதும்இலங்கை நீதித்துறையில்வழக்கமான, இயல்பான ஒன்று. அப்படி நீதிபதிகள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்படும்போதுஅவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் சட்ட மாஅதிபர்திணைக்களத்தின் சார்பில் ஒருவர் முற்பட்டு வாதங்களைமுன்வைப்பதும் வழக்கம். அப்படிப் பலப் பல வழக்குகள்நடந்திருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் அந்த வழக்குகளுக்குப் பயந்துகொண்டு அவர் வெளியேறினார் என்று அர்த்தப்படுத்துவதுபோன்று கருத்துரைப்பதுமோசமானது.

செப்டெம்பர் 21 சட்ட மா அதிபர் திணைக்களத்தால் நீதிபதிஅழைக்கப்பட்டிருந்தார் என்றும் அங்கு வைத்து குருந்தூர் மலை வழக்கில் அவர் வழங்கிய கட்டளைகளைத் திருத்தியமைக்கும்படி அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது என்றும் ஊடகங்களில் வெளியான செய்திகளுக்குப் பதிலிளிக்கும் வகையில், அந்த வழக்குகளின் ஏற்பாட்டுக்காகவே நீதிபதி சட்டமா அதிபரைச்சந்தித்தார் என்றுவிளக்க நீதி அமைச்சர் முயன்றிருக்கவும்கூடும்.

அதற்கு முன்னதாக நேற்று வெளியான செய்திகளில் பலவும் செப்டெம்பர் 21 சட்ட மாஅதிபர்திணைக்களத்தால் நீதிபதிக்கு கட்டளைகளைத் திருத்தியமைக்குமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டது என்று நீதிபதி தெரிவித்திருக்கிறார் என்று தெரிவித்திருந்தனவே தவிர எந்த ஊடகத்திற்கு அவர் அப்படித் தெரிவித்தார் என்று ஒரு செய்தியில்கூடத் தெரிவிக்கப்படவில்லை. நீதிபதிக்கு நெருக்கமான யாராவது அவர் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்ட விவரத்தையும் அது தொடர்பான தமதுஅனுமானங்களையும் தெரிவித்ததை வைத்து ஊடகங்கள் செய்தியை வெளியிட்டிருக்கக்கூடும்.

இது எதனையும் கருத்தில் எடுக்காமல் நீதி அமைச்சர் அவசரமாக நீதிபதியைக் குற்றஞ்சாட்டுவது போன்று கருத்துக்களை வெளியிட்டிருப்பது ஏற்புடையதல்ல. நீதி அமைச்சரின் பதில் சிங்கள பிபிசி செய்திச் சேவைக்கு நேரில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அதில் செப். 21 நீதிபதி தானாகவேதான் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்குச் சென்றிருந்தார் என்று கூறியிருக்கிறார்.

ஆனால், சட்ட மா அதிபர் திணைக்களம் நேற்றுச் கசியவிட்ட தகவல்களில் (அது உத்தியோகபூர்வமாக எந்தச் செய்திக் குறிப்பையும் வெளியிடவில்லைஎன்றாலும் கொழும்பிலுள்ளமுக்கியமான பலருக்கு இது தொடர்பிலான தகவல்கள்திணைக்களத்தைச் சேர்ந்தவர்களால் "உங்கள் தகவலுக்காக மட்டும்" என்று குறிப்பிட்டுக்கசியவிடப்பட்டது) நீதிபதி சரவணராஜா எழுதிக் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலேயே அவர் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, நீதிபதியை சட்ட மா அதிபர் திணைக்கத்திற்கு வருமாறு உத்தரவிடப்படவில்லை, பதிலாக, நீதிபதிக்காக சட்ட மா அதிபர் திணைக்களம்முற்படவேண்டியிருந்த வழக்குகள் தொடர்பான கலந்துரையாடலுக்காக அவர் அழைக்கப்பட்டிருந்தார் என்கின்றது அந்த விவரம். சட்டத்தரணி ஒருவருக்கும் அவரது கட்சிக்காரர் ஒருவருக்கும் இடையிலான சந்திப்புப் போன்றது இந்தச் சந்திப்பே தவிர இது வொரு உயர் அதிகாரி - பணியாளர் பதவி நிலைகளில் நடத்தப்பட்டது அல்ல என்பது சட்ட மா அதிபர் திணைக்களத்தின் வாதம்.

அவர்களின் கூற்றுப்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 7 எழுத்தாணை கோரும் (ரிட்) மனுக்களில் 3 தனிப்பட்ட மற்றும் தொழில் முறையான வழக்குகளில் நீதிபதியின் பெயர் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில் ஒன்று மட்டும்நிச்சயம். செப்டெம்பர் 21ஆம் திகதி சட்ட மா அதிபருக்கும் நீதிபதிக்கும் இடையில் சந்திப்பு நடந்தது. அங்கு என்ன பேசப்பட்டது என்பதுஇன்னும்உறுதியாகத் தெரியாது. ஏனெனில் நீதிபதி எந்தவொரு ஊடகத்திற்கும் இது தொடர்பில் நேரடியாகக் கருத்துத் தெரிவித்ததாக இல்லை. அப்படி எந்தவொரு ஊடகமும் இதுவரையில் அவர் தனக்கு நேரடியாகக் கருத்துத் தெரிவித்தார் என்று செய்தி வெளியிடவுமில்லை. ஆனால் ஊடகச் செய்திகளை நம்பிக்கொண்டு சட்ட மா அதிபர் திணைக்களமும் நீதி அமைச்சரும் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்கிற கணக்காக, எங்களில் தவறில்லை என்று காட்டப் பார்க்கிறார்கள்.

நீதிபதிஇனிதனதுநிலையை வெளிப்படுத்தி பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிக்கும்போது, இரு தரப்பினரதும் உத்தியோகபூர்வக் கருத்துக்கள் வரும்போதுநிலைமைஇன்னும் தெளிவுபடும். எது உண்மை என்பதும் தெளிவாகும். காத்திருப்போம்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

### அச்சுறுத்தலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இதற்கமைய செப்டெம்பர் 4 யாழ்ப்பாணத்தில் பெரும் போராட்டத்தை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது .

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் யாழ். நகரில் இருந்து மருதனார் வரையில் தொடர் மனித சங்கிலி போராட்டம் நடத்துவதெனவும் திட்டமிடப்பட்டுள்ளது.

காலை 9 மணிமுதல் 10 மணிவரை ஒரு மணி நேரத்திற்குஇந்தப்போராட்டம் இடம்பெறவுள்ளது.

இதேநேரம்முல்லைத்தீவு மாவட்டத்தை முழுமையாக முடக்கும்ஒருபோராட்டத்தை செப்டெம்பர் 7 நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை உடனடியாக ஜ.நா. மற்றும்சர்வதேச நாடுகளின் கவனத்துக்கு கொண்டு செல்வது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### சரத்வீரசேகர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களைச் சந்தித்த அக்கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமகாலத்தில் சபாநாயகரும், ஜனாதிபதியும் நீதிமன்றத்தின் தீர்ப்பினை ஏற்றுக்கொள்ளாத நிலைமைகள் தீவிரமடைந்து வருகின்றன. குறிப்பாக, நீதிமன்றங்களின் தீர்மானங்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றன.

ஆசிரியர்கள்சொல்வதை சீடர்கள் அவ்வாறே செய்கின்றனர். அதுபோன்று தான் நீதித்துறையின் மீதான தாக்குதல்களும் காணப்படுகின்றன.

நாடாளுமன்றஉறுப்பினர் சரத்வீரசேகர நீதிபதிகளை அச்சுறுத்தும் வகையில் செயற்படுகின்றார்.சிறப்புரிமைகளை பயன்படுத்தி விமர்சனங்களைச் செய்கின்றார்.

முல்லைத்தீவுநீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது யாரால்என்பது கண்டறிப்பட வேண்டும். ஏற்கனவே சரத்வீரசேகர முல்லைத்தீவு நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுத்தமைக்காகவடமாகாண சட்டத்தரணிகள் ஒருநாள் பணிப்பகிஸ்கரிப்பையும் முன்னெடுத்திருந்தனர்.

ஆகவே, சரத்வீரசேகரவின்அச்சுறுத்தல்விடுக்கும் செயற்பாடு தொடர்பில் முழுமையாகவிசாரணைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. இந்த விடயத்தினை வெறுமனே கடந்து செல்ல முடியாது - என்றார்.

### கிளிநொச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரித்தையும் நிலைநிறுத்தியதற்காகவும், தியாகதீபம் திலீபனின்நினைவேந்தலை நடாத்துவதற்கு அனுமதித்ததற்காகவும் சிங்கள பேரின வாதத்தால் பழிவாங்கப்பட்டுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா அவர்களுக்கு ஏற்பட்ட இந்நிலை, தமிழினம்சார்ந்து சிந்திக்கின்ற, இனத்தின் இருப்பை நிலைநிறுத்த நியாயத்தின் பாற்பட்டு கடமையாற்றுகின்ற இன்னுமோர்தமிழ்நீதிபதிக்கு ஏற்படக்கூடாது என்பதை வலியுறுத்தவேண்டியகடமை எம்ஒவ்வொருவருவருக்கும் உள்ளது.

நீதியின் செங்கோலை, அதிகாரத் தரப்புகளுக்கும் சிங்கள பேரினவாதத்திற்கும் சாதகமாக வளைக்க மறுத்ததற்காக ஒரு தமிழ் நீதிபதிக்கு இந்த நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், இந்த நாட்டின் சிறுபான்மை இனமாக அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஈழத்தமிழினத்தின் இருப்பு எவ்வளவு தூரம் சவாலுக்கு உட்படுத்தப்படும் என்பதுபற்றி சர்வதேச சமூகத்தின் கவனத்தைக் கோரும் வகையில் இக் கண்டனப் போராட்டத்தில் அனைத்துத்தரப்பினரையும் இணைந்துகொள்ளுமாறு அழைத்துநிற்கிறோம்.

இனத்தின்இருப்புக்காகப் பதவி துறந்திருக்கும் நீதிபதிக்காக சர்வதேசத்தின் நீதியைக் கோரத் தவறுவது, எங்கள் இனத்தின் இருப்பை இன்னும் வலுவிழக்கச்செய்யும்என்பதை உணர்வோம், இணைவோம் - என்றுள்ளது.

# நீதித்துறை மீதான கழுவமுடியாத கறை

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் கண்டனம்

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா தனக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ள செய்தி இலங்கையின் நீதி துறை மீது கழுவமுடியாத கறையாகப் படிந்துள்ளது. நீதித்துறை மீதான தமிழ் மக்களின்நம்பிக்கைஉடைக்கப்பட்டுள்ளதென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளமான மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

குருருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலானதீர்ப்பினைஅடுத்து உயிர்அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் வகித்து வந்த நீதிபதிப் பொறுப்புக்கள் அனைத்தையும் துறந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ.சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியுள்ளாரென ஊடகங்களில்செய்தி வெளிவந்துள்ளன.

குருந்தூர்மலைவழக்கில்நீதிபதிவழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும். அண்மையில் தனக்கான (நீதிபதிக்கான) பொலீஸ் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ள அவர்தான்நீதிபதிபதவியினை இராஜினாமாச் செய்துள்ளார்.

இந்தநிலைமை இலங்கைநீதித்துறைக்கு மிகப்பெரும் அவமானம் என்பதோடு, தமிழ் மக்கள் இலங்கையின் நீதித்துறை மீது முழுமையான நம்பிக்கை இழக்கும் நிலைமைக்குஇட்டுச்செல்லும்சம்பவமாகவும் காணப்படுகிறது.

எனவே, இவ்வாறான நிலைமைகள் இனியும் நாட்டில் இடம்பெறாத வகையில் நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதோடு, நீதிதுறை பணியாளர்களின்சுதந்திரமானபணிகளுக்கும் அச்சுறுத்தல் இல்லாத சூழல் உருவாக்கப்படல் வேண்டும். தவறின் நாடு மேலும் மேலும் நெருக்கடியான சூழல் நிலைக்குள் தள்ளப்படுவதோடு, எக்காலத்தில் நிலையான சமாதானமும், இனங்களுக்களுக்கிடையே நல்லிணக்கமும் ஏற்படாது போய்விடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# உரிய விசாரணை வேண்டும்

## சுப்பையா ஆனந்தகமார் வலியுறுத்து

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா உயிர் அச்சுறுத்தலுக்கும், தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அதன் பின்புலம் குறித்து உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவர் அடங்கிய குழுவின் உறுப்பினர் சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

இந்தவிடயம்எமதுநாட்டின்ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள இழுக்காகும். அவருக்கு அவ்வாறானஅச்சுறுத்தல்களைவிடுத்தவர்கள் மற்றும் அவரின் வெளியேற்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை நீதி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

அதற்காகவிசேடகுழுவொன்றைநியமிக்க வேண்டுமென நீதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கிறேன். நீதிபதி ரி.சரவணராஜாவின் வெளியேற்றம் நாட்டில் வாழ்வதற்கான சுதந்திரத்தை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் அமைந்துள்ளதால் இதுதொடர்பில் உடனடி விசாரணைகளுக்குப் பணிக்க வேண்டும் - என்றுள்ளார்.

### இளைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றையதினம் வழிபாடுகளுக்காகச் சென்ற அவர் வழிபாடுகளை நிறைவு செய்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

முதலில், உடல்நிலை தொடர்பில் எழுப்பபட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், நான்நல்லஉடல்நிலையுடன் உள்ளேன். என்னைப் பார்த்தால் உங்களுக்கு நோய்வாய் பட்டவராக தெரிகின்றேனா?

சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்களிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம். உங்களால்நான் நோய்வாய்ப்பட்டுள்ளேனா அல்லது நல்லநிலையில் உள்ளேனாஎன்பதைபார்க்க முடிகிறதல்லவா -என்றார்.

அதனையடுத்து பொது ஜன பெரமுனவின் தலைமைத்துவ மாற்றம் சம்பந்தமாக வினவப் பட்டபோது, நாம் தொடர்ந்தும் பொது ஜன பெரமுனவின் தலைவராக இருக்க விரும்பவில்லை என்றார். ''தலைமைத்துவத்தினை ஏற்றுக்கொள்வதற்குப் பலர் எமது அணியில் உள்ளார்கள். இளையவர் ஒருவருக்கு அந்த பொறுப்பை வழங்க வேண்டும்.அதற்குரியவருக்கு பயிற்சிகளை அளிக்க வேண்டும்'' என்றார்.

### நீதிபதிக்கான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரி.சரவணராஜாவுக்கு உயிரச்சுறுத்தல் காணப்பட்டதால் அவர் நாட்டை விட்டு வெளியேறுவதாக பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

உண்மையில், அவருக்கு உயிரச்சுறுத்தல் காணப்பட்டதா, அவ்வாறு காணப்பட்டால் அது யாரால் விடுக்கப்பட்டது, அதனுடன் தொடர்புடைய தரப்புக்கள் யாவை என்பன தொடர்பில் விரிவான விசாரணையை உடனடியாக முன்னெடுக்க வேண்டும்.

நீதித்துறையின் சுயாதீனத்தினையும், நன்மதிப்பையும் உறுதிப்படுத்துவதற்காக இந்தச்செயற்பாடு மிகவும்அவசியமாகஉள்ளது.

ஆகவே குற்றப்புலனாய்வுப் பிரிவு இந்த விடயத்தில் தாமதமின்றி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எழுத்து மூலமான கோரிக்கையையும் அனுப்பி வைக்கவுள்ளது - என்றார்.

### திருமுறிகண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டகாலமாகக்குடியிருந்து வருகின்றார். அவர்கிறிஸ்த்தவமத்திற்கு மாறியவர். சிவன் கோயில் நிர்வாகத்திற்கும் ஊடகவியலாளருக்கும் இடையில் மீள் குடியேற்றத்திற்குப் பின்னனர் தொடர்ந்து காணிப் பிணக்கு நிலவி வருகிறது. இந்த நிலையில் ஊடகவியலாளர்குடியிருக்கும் காணியில் ஒரு பகுதி சிவன் ஆலயத்திற்கும் ஒரு பகுதி ஊடகவியலாளருக்கும் எனப் பிணக்குக்குப் பிரதேச செயலகத்தினால் தீர்வு காணப்பட்டது.

குறித்த ஊடகவியலாளர் அதனை ஏற்றுக்கொள்ளாது காணியின் பெரும் பகுதியை தனக்கு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார்.

தொடர்ச்சியாக பல்வேறு நடவடிக்கையில் அவரின் அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்த நிலையில் நேற்றுசிவன்கோயிலுக்குரிய காணியில் ஒரு புத்தர் சிலையை வைப்பதற்கு முயன்றார் என்று கிராம மக்கள் தெரிவித்தனர்.

ஊர்மக்கள்விழிப்படைந்து சிவன் கோவிலில் ஒன்று சேர்ந்து அவரது புத்தர் சிலை வைக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வருகை தந்த மாங்குளம் பொலீஸார் பொது மக்களுடன் உரையாடி சட்டவிரோதமான இந்த நடவடிக்கையை தடுப்பதாகவும் தெரிவித்துச் சென்றனர் என்றும் கூறப்பட்டது. (113)

### பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீதிபதிக்குஉயிர்அச்சுறுத்தல் மற்றும் அழுத்தம் காரணமாக வெளியேறியுள்ளார் என்று அவர் வெளியிட்டதாக அறிக்கையொன்று காணப்படுகின்றது.

இருப்பினும், அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப் பில் எவ்விதமான குறைப்புக்களையும் பொலிஸ் தரப்பு மேற்கொள்ளவில்லை என்பதை உறுதியாக கூறிக் கொள்வதற்கு விரும்புகின்றேன் - என்றார் அவர்.

### இரு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்புகளின் போது கஜேந்திரகுமார் தமிழர் தாயகத்தின் இன்றைய நிலையை தெளிவாக விளக்கினார்.

சிறிலங்கா அரசப

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# நீதிபதி இலக்கு வைக்கப்படுவது இனவாத முயற்சியின் வடிவமே

## யாழ். பல்கைகலை ஆசிரியர் சங்கம் கண்டித்து அறிக்கை

நீதிபதி சரவணராஜா போன்றோர்இலக்கு வைக்கப்படுவது இந்த இனவாத முயற்சியின் வடிவமே. அழுத்தத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் நீதிபதி சரவணராஜா மீளவும்தன்பதவிக்குத்திரும்பி, சுயாதீனமான முறையில்தனதுகடமைகளைச்செய்யக்கூடிய நிலையினை ஆட்சியாளர்கள் உடனடியாக ஏற்படுத்தவேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவுமாவட்டநீதிபதிசரவணராஜா உயிர் அச்சுறுத்தல் மற்றும் மனஅழுத்தம் காரணமாகப் பதவி விலகியிருப்பது குறித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிப் பதவி உள்ளடங்கலாக நீதித் துறையிலே தான் வகித்த அனைத்துப் பதவிகளையும் அரசியல் ரீதியான அழுத்தங்களின் காரணமாகவும், உயிர் அச்சுறுத்தலின் காராணமாகவும் இராஜினாமாச் செய்துவிட்டு, இலங்கையிலே வாழ முடியாத நிலையில் நாட்டை விட்டு வெளியேறி இருக்கும் நீதிபதி ரி.சரவணராஜா இன்று எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி ஜனநாயகத்தினையும், நீதியினையும் மதிக்கும் அனைவருக்கும் அதிர்ச்சி அளிக்கிறது. இலங்கையின் நீதித் துறையின் சுயாதீனத் தன்மை எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனையும் இது தெளிவாக வெளிக்காட்டுகிறது.

நீதிபதி சரவணராஜா, குருந்தூர் மலையில் தொல்பொருள் திணைக்களத்தினால் சிங்கள பௌத்தத் தேசியவாத நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்ட மீறல்களை வெளிப்படையாகக் கண்டனம் செய்து, நியாயமான தீர்ப்புக்களை வழங்கிய ஒரு நீதிபதி ஆவார்.

தமிழ் மக்களின் நினைவேந்தல் செயற்பாடுகளுக்கு அரசினால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்ட போதெல்லாம் மக்களின் நினைவேந்தல்உரிமையினைஉறுதிப்படுத்தித் தீர்ப்புக்களை வெளியிட்ட ஒருவர்.

இவ்வாறான நேர்மையும், துணிச்சலும் மிக்க நீதிபதியினை அச்சுறுத்தும் வகையில் தென்னிலங்கையில் உள்ள தீவிர சிங்கள தேசியவாத சக்திகள் வெறுப்புப் பரப்புரைகளை அண்மையிலே முன்னெடுத்திருந்தன.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இந்த நீதிபதியினை மிகவும் மோசமான முறையில் விமர்சித்தும் அச்சுறுத்தியும் இருந்தார்.

நீதிபதி சரவணராஜா தனது இராஜினாமாக் கடிதத்திலே தனது உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் குறித்தும், தாம் எதிர்நோக்கிய அழுத்தம் குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

செப்டெம்பர் 21அன்று சட்டமா அதிபர் நீதிபதி சரவணராஜாவினைத் தனது அலுவலகத்திற்கு அழைத்தார் எனவும், அந்தச் சந்திப்பிலே குருந்தூர்மலை விவகாரம் தொடர்பிலே நீதிபதி சரவணராஜா வழங்கிய தீர்ப்புக்களை மாற்றியமைக்கும்படி நீதிபதியின் மீது ஆலோசனை என்ற வடிவத்திலே அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாகவும் ஊடகங்களிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சட்டத்திற்கு அமையத் தன் கடமைகளைச் செய்தஒருநீதிபதிக்கேஇந்தநிலைமைஏற்படின், நாளாந்தம் இனவாத செயன்முறைகளை எதிர்கொண்டுபோராடும்நாட்டின்சிறுபான்மைச் சமூகங்களின் நிலைமை என்ன என்ற கேள்வியும் இங்கே எழுகின்றது.

நீதிபதி சரவணராஜாவுக்கு எதிராக இடம் பெற்றவெறுப்புப்பரப்புரைகள்,அச்சுறுத்தல்கள், அவரது பணியினை அவர் சுயாதீனமாகச் செய்வதனைத் தடுக்கும் வகையில் அவரின் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் அனைத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகஆசிரியர்சங்கம்வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த முயற்சிகளில் ஈடுபட்ட அனைவரும் நீதிபதி சரவணராஜா இன்று எதிர்கொள்ளும் நெருக்கடி தொடர்பிலேபொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படல்வேண்டும்எனயாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோருகிறது.

வடக்குக்கிழக்கின்நீதிக்கட்டமைப்புஇன்று அச்சுறுத்தல்களையும், அழுத்தங்களையும் சந்தித்து வருகிறது. வடக்குக் கிழக்கில் பணியாற்றும்நீதிபதிகள்அச்சுறுத்தப்படுவதற்கு அடிப்படைக்காரணமாக அமைவது இலங்கை அரசினது சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலே. தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இந்தப் பிரதேசத்தினை சிங்கள பௌத்தமயமாக்குவதும், தமிழ் மக்களின் நினைவேந்தல் செயன்முறைகளை வலிந்து தடுத்தலும் இந்த நிகழ்ச்சி நிரலின் பகுதிகளாகும்.

இந்த நிகழ்ச்சி நிரலிற்குத் துணை போகாத நீதிபதிகளும், ஏனைய அரச ஊழியர்களும் பல்வேறு வழிகளில் அச்சுறுத்தலுக்கும், அழுத்தத்துக்கும், நிர்ப்பந்தங்களுக்கும் ஆளாகின்றனர்.

சிங்களபௌத்தமேலாதிக்கம்ஒழியும்வரை வடக்கு-கிழக்கிலே நீதித்துறையும்சரி ஏனைய நிர்வாகத் துறைகளும் சரி பாதிப்பினையே எதிர்கொள்ளும். எனவே, சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை எதிர்த்து, நாட்டின் எல்லா சமூகங்களும் சமத்துவமான முறையிலே வாழ்வதனை உறுதிப்படுத்தும் முயற்சிகளை முன்னெடுப்பதற்கான அணி திரட்டலிலே நாட்டின் எல்லா முற்போக்கு சக்திகளும்இன, மத, பிராந்திய பேதமின்றி ஒன்றிணைய வேண்டும்.

நாடு மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடி ஒன்றிலே அகப்பட்டிருக்கும் இன்றைய நிலையில், இனவாதத்தினைக் கையில் எடுக்கும் அரசியல் சக்திகள்மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் இருந்து அவர்களைத்திசைதிருப்பிவிட முயற்சி செய்கின்றனர்.

நீதிபதி சரவணராஜா போன்றோர்இலக்கு வைக்கப்படுவது இந்த இனவாத முயற்சியின் வடிவமே.

அரசினதும், சிங்கள மேலாதிக்க சக்திகளினதும் இந்தத் தந்திரோபாயத்தினை விளங்கிக் கொண்டு இனவாதத் தரப்புக்களையும், மக்களின் நலனிலே அக்கறை அற்ற இந்த அரசையும் தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அழுத்தத்துக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் நீதிபதி சரவணராஜா மீளவும்தன்பதவிக்குத்திரும்பி, சுயாதீனமான முறையில் தனது கடமைகளைச்செய்யக் கூடிய நிலையினை அரசாங்கம் உடனடியாக ஏற்படுத்த வேண்டும்; நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட வேண்டும்.

வடக்குக் கிழக்கிலே நீதித்துறையும், நீதிபதிகளும் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் முடிவுக்குக்கொண்டுவரப்பட வேண்டும்; இந்த அழுத்தங்களுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அடிநாதமாக இருக்கும் ஆளும் தரப்பினரதும், சிங்கள பௌத்த மேலாண்மைவாத சக்திகளினதும்இனவாதம் முறியடிக்கப்பட வேண்டும்.

இந்த நோக்கங்களுக்காக நாட்டு மக்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டியது அவசியம் என யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகிறது.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை இலங்கை வழங்காது என்பதற்கு சான்று

## நீதிபதி பதவி விலகியமை குறித்து சபா. குகதாஸ் கருத்து



நாட்டில்பாதிக்கப்பட்டமக்களுக்கான நீதியை இலங்கை ஆட்சியும் நீதித் துறையும் வழங்க தயார் இல்லை என்பதை நீதிபதிரி.சரவணராஜாவிற்கு விடுக்கப்பட்டஅச்சுறுத்தலும்அவர்பதவி விலகியமையும்வெளிப்படுத்துகின்றது எனவடமாகாணசபையின்முன்னாள் உறுப்பினர்சபா.குகதாஸ்தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் இலங்கை அரசு நீதித் துறையை சுயாதீன துறை என்று கூறி வந்தாலும் அரசியல் தலையீடு காரணமாக நீதித்துறை சுயாதீனத்தை இழந்து செயற்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

பிரதம நீதியரசராக இருந்த சிராணி பண்டாரநாயக்க விவகாரத்தில் இந்த விடயம் வெளிப்படையானது. அதுமட்டுமல்லாது தற்பொழுது நீதிபதி சரவணராஜா குருந்தூர்மலை விவகாரத்தில் நீதியான முறையில் பக்கசார்பற்று வழங்கிய தீர்ப்பை இலங்கை ஆட்சியாளர்களும் நீதித்துறையும் ஏற்றுக்கொள்ள மறுத்ததன் காரணமாகவே, நாடாளுமன்றத்தில் சரத் வீரசேகர நீதிபதியை மன நோயாளி என்று விமர்ச்சித்தார்.

அத்தோடு, இதற்கு இலங்கையின் அரசோ அதிகாரிகளோ எந்தவித கண்டனங்களையும்வெளிப்படுத்தமையானது சரவணராஜாவிற்கு எதிராக அரசாங்கம் மறைமுகமாகச் செயற்படுகின்றதா என்கிற சந்தேகத்தைஅனைவருக்கும் ஏற்படுத்துகின்றது.

குருந்தூர்மலைவிகாரை தொடர்பில் நீதிபதி கொடுத்த கட்டளைகளை மாற்றும்படி அவர்நிர்ப்பந்திக்கப்பட்டார்என்றுகூறப்படுவது நிதித்துறையானது தனது சுயாதீனத்தன்மையைஇழந்தமையை வெளிப்படுத்துகிறது.அத்தோடுஇலங்கை நிதித்துறையூடாக தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்பதையும் வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றது.

இதேவேளை சனல்-4 வெளியிட்ட காணொளி தொடர்பில் சர்வதேச விசாரணை கோரிய எதிர்க்கட்சி தலைவர் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள் நாட்டு நீதி பொறிமுறையில் நம்பிக்கையில்லை என்றுகுறிப்பிட்டமையும்இந்தநாட்டின் நீதி துறையின் மீது கேள்வியை எழுப்பியுள்ளது.

ஆகவே, சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும். அத்தோடுதமிழ்தேசியம் சார்ந்த கட்சிகள், அமைப்புகள், சிவில் அமைப்புகள் எல்லாம் ஓரணியாகத் திரண்டு நீதிபதி சரவணராஜாவிற்கு நேர்ந்த அநீதிக்கு நியாயம் கிடைக்கப் போராடவேண்டும்.

அதன் மூலம், எதிர்வரும் காலங்களில் அரச அதிகாரத்தின் ஊடாக நீதிமன்ற கட்டளைகளை மீற நினைக்கும்தரப்பினருக்குமுற்றுப்புள்ளி வைக்க முன்வரவேண்டும் - என்றார்.

# நீதித்துறை எதிர்கொள்ளும் சவால்களுக்கு நீதிபதி மீதான அச்சுறுத்தல் எடுத்துக்காட்டு

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

தனக்குஏற்படுத்தப்பட்ட உயிர்அச்சுறுத்தல்மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாகத் தனது பதவிவைத் துறப்பதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா அறிவித்துள்ளமையானது, நாட்டின் நீதித்துறை எத்தகைய சவால்களை சந்தித்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

அவர்நேற்றுவெளியிட்ட ஊடகஅறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர், அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குருந்தூர்மலைவிவகாரம்தொடர்பானநீதிமன்ற வழக்கின் தீர்ப்புகள் மற்றும் கள விஜயங்கள் மீதான அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் நீதிபதி அவர்களுக்கு விடுக்கப்பட்டு வந்துள்ளது இதனூடாக வெளிப்பட்டுள்ளது. சுயாதீனமாக செயற்பட வேண்டிய நீதிக்கட்டமைப்பை ஆட்டங்காணச் செய்த குறித்த அச்சுறுத்தல்வாதிகளை ஜனநாயக மாண்பற்றவர்களாகவே கருத வேண்டியுள்ளது.

குருந்தூர்மலை வழக்கு தொடர்பாக நீதிபதி சரவணராஜா அவர்கள் கடந்த 04.07.2023 அன்று குருந்தூர்மலைக்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்த கருத்துகளை சுட்டிக்காட்டி 07.07.2023 அன்றைய நாடாளுமன்ற உரையிலும், தொடர்ந்து பொதுவிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு எதிராக, நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர கடுமையானஅவதூறுகளைவெளிப்படுத்தியிருந்தார்.

நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்தி நீதித்துறையை கேலிக்குள்ளாக்கிய ஒருவரது நிலைப்பாட்டுக்கு அமைவாக நாட்டின் சட்டமா அதிபர் திணைக்களமும் செயற்பட்டுள்ளமை அதிர்ச்சியை தருகிறது. குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிபதி வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு சட்டமா அதிபர் மட்டத்திலிருந்தும், அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளமையானது மோசமான அதிகார துஸ்பிரயோகமாக அமைகிறது.

அத்துடன், நீதிபதிக்கான பொலிஸ் பாதுகாப்பு அண்மையில் குறைக்கப்பட்டிருந்ததோடு, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக தன்னைக் கண்காணித்து வந்திருந்ததாகவும் நீதிபதியால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக குருந்தூர் மலை வழக்குடன் தொடர்புபடுத்தி தனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் தனிப்பட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளதாகவும், இவற்றின் அடிப்படையில் தனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தான் மிகவும் நேசித்த தனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரீ. சரவணராஜா அறிவித்துள்ளார்.

இந்த பதவி துறத்தலானது, பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே இலங்கையின் அனைத்து அரச நிறுவனங்களும் செயற்பட வேண்டும் என்ற கடும்போக்குவாதத்தைமீண்டும்வெளிப்படுத்தியுள்ளது. அந்த கடும்போக்குவாதத்துக்கு நீதித்துறையும் விலக்கல்ல என்ற துர்ப்பாக்கிய நிலையை கண்டு நான் பெரிதும் கவலையடைந்துள்ளேன்.

தனிநபர்களாலும், அரச கட்டமைப்புகளாலும் வஞ்சிக்கப்படும் மக்கள் சட்டத்தை நம்பி, அதை நடைமுறைப்படுத்தும் நீதித்துறையை நாடுகிறார்கள். நீதித்துறை ஒன்றே சுயாதீனமாக செயற்பட்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் என்ற நம்பிக்கை அவர்களுக்குஇத்தனைகாலமும்இருந்துவந்துள்ளது.

ஆனால், நீதித்துறையையும் வளைத்துப்போடும் வகையில் சிலர் செயற்படும்போது அதை தடுக்காமல் நீதித்துறைக்கு காவலாக இருக்க வேண்டியவர்களே நீதித்துறையின் சுயாதீனத்தை கேள்விக்குட்படுத்தும் போது, நாட்டின் எதிர்காலம் குறித்த அச்சம் மக்களிடம் உருவாக்குகிறது.

ஏற்கனவே இந்நாட்டின் சட்டங்கள், வடக்கு - தெற்கு என்ற பேதங்களை பார்க்கின்றன என்ற குற்றச்சாட்டு உள்ள நிலையில் இந்த சம்பவமானது அக்குற்றச்சாட்டுகளை இன்னும் வலுச்சேர்த்துள்ளது. வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல்கள் தொடர்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பணிப்புரைகளையே மீறிச் செயற்படக்கூடிய தரப்புகள் இந்நாட்டை ஆபத்தான பாதைக்கு இட்டுச் செல்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜனநாயக மாண்புகள் தெரியாத, அவற்றை மதிக்காத அரசியல்வாதிகளாலும், நாட்டில் இன ஒற்றுமையை சிதைத்து அதில் இலாபம் பார்க்க நினைக்கும் தரப்புகளாலும் முன்னெடுக்கப்படும் இத்தகைய செயற்பாடுகளை தடுத்துநிறுத்தி, சுயாதீனமான சட்ட, நீதித்துறையின் பாதுகாப்பை உறுதிசெய்யும் பணிகளை இச்சந்தர்ப்பத்திலாவது நாம் ஆரம்பிக்க வேண்டும் - என்றுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெட்கக்கேடு, வேதனை

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தான் வகித்த நீதிபதி பதவிகள் அனைத்திலிருந்தும் ஒரு குறு அறிவித்தல் மூலம் விலகிச் சென்றிருக்கிறார். அந்தளவிற்கு அவருக்கு உயிர் அச்சுறுத்தலும் மனநெருக்கீடுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்று நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இப்படி நீதிபதி ஒருவர் உயிர் அச்சுறுத்தலுக்கும் மன நெருக்கீடுகளுக்கும் உள்ளாக்கப்பட்டுப் பதவி விலகிச் சென்றதாக இதற்கு முன்னர் அறியப்பட்டதில்லை. அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றதாக எந்தவொரு பதிவும் இல்லை. அதிலும் ஒரு தமிழ் நீதிபதி அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு பதவி விலகியிருப்பது நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத் தன்மையை மட்டுமல்ல இலங்கையில் தமிழர்களின் இருப்பையும்கூடக் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தில்அமைந்துள்ளகுருந்தூர்மலையில் தொல்பொருள் இடத்தில் விகாரை அமைக்கப்படுவது தொடர்பான வழக்கை விசாரித்து வந்தவர் சரவணராஜா. நீதிமன்றத்தில் தனக்கு முன்னால் வைக்கப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் அவர் கட்டளைகளைப் பிறப்பித்தார். அப்படியே விகாரைக் கட்டுமானப் பணிகளை நிறுத்தும்படி உத்தரவிட்டார். அது வெறுமனே தமிழர் தரப்பினரின் வாதங்களைக் கேட்டுமட்டும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவல்ல. தொல்லியல்திணைக்களத்தினரின் கருத்துக்களையும் விளக்கங்களையும் கேட்டுப்பெற்றுப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள். அதற்காகப் பல மாதங்கள் காத்திருந்து பெறப்பட்ட விளக்கங்களின் பின்னரே பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் அவை.

இலங்கைச் சட்டங்களின் கீழ் ஒவ்வொரு தனிமனிதருக்கும் இருக்கும் உரிமைகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சட்ட அணுகுமுறை. மாவட்ட நீதிமன்றத்தின் அந்த உத்தரவுகள் தவறு என்று கருதினால் அதனை எதிர்த்து மேன்முறையீடுகளைச் செய்வதற்கான வசதி, சட்ட ஏற்பாடுகள் உள்ளன. அதன்படி மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அணுகி தேவையான நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் இருந்தன. அவை பயன்படுத்தப்பட்டுமுள்ளன. கிட்டத்தட்ட 7 எழுத்தாணை மனுக்கள் மேன்முறையீடு நீதிமன்றத்தில் இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அப்படியிருக்கும்போதும் பௌத்த, சிங்கள பேரினவாதத்தைக் கக்கும் சரத் வீரசேகர போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதிபதியை அவதூறு செய்வதற்கு இடமளிக்கப்பட்டது. நாட்டின் தலைவரோ, நாடாளுமன்ற சபாநாயகரோ அதனைக் கண்டிக்கவில்லை. நீதிமன்ற வழக்குகள் மற்றும் நீதிபதிகள் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது அவதானமாக இருக்கும்படி மட்டுமே சபாநாயகர் ஒரு கோரிக்கை மட்டுமே விடுத்திருந்தார். நீதிபதியை தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினரை ஒப்புக்குக் கடிந்துகொள்ளக்கூட நாட்டின் தலைவர்களுக்கு மனம் வந்திருக்கவில்லை.

அதன் விளைவே – அப்படி அமைதியாக இருந்து பௌத்த, சிங்கள பேரினவாதத்திற்கு ஆதரவளிக்கும் சிங்களத் தலைவர்களின் போக்கே – இன்று நீதிபதி தனது பதவிகளில் இருந்தும் நாட்டில் இருந்தும் வெளியேற வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இது வெட்கக்கேடு. முறைமை மாற்றம், நீதி, அமைதி, நல்லிணக்கம் என்றெல்லாம் வாய்கிழியப்பேசும் ஆட்சியாளர்கள் ஒரு தமிழ் நீதிபதிக்குக் கூட நியாயத்தையும் பாதுகாப்பையும் வழங்க முடியவில்லை என்பது பேரவமானம். ஆனால், ஆட்சியாளர்கள் அதனைப் புரிந்துகொண்டது மாதிரித் தெரியவில்லை. நீதிபதியின் பதவி விலகலுக்கான காரணத்தை ஆராய்ந்து அதிலுள்ள அடிப்படைத் தவறுகளைச் சரிசெய்து எதிர்காலத்திலாவது நிலமையைச் சீர்செய்யவேண்டியவரான நீதி அமைச்சரோ, நீதிபதி சரவணராஜாவிற்கு எதிராக 5 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் இருக்கின்றன. அவற்றில் பிரதிவாதியாக அவர் குறிப்பிடப்பட்டிருக்கிறார் என்று கருத்துத் தெரிவித்து தவறான பிம்பத்தை ஏற்படுத்தி சேறுபூச முனைவதுதான் இங்கு நடக்கின்றது. பெரும் வேதனைக்குரிய விடயம்.

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல் தொடர்பாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று இப்போது சட்டத்தரணிகள் சங்கமும் வேறு பல பொது அமைப்புக்களும் வலியுறுத்தியுள்ளன. இந்த விசாரணைகளையாவது சுயாதீனமாக நடத்துவதற்கு அரசு முன்வரும் என்று நம்பமுடியவில்லை. அப்படிப்பட்ட சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என்றால் இலங்கையின் நீதித்துறை மீது மக்களுக்கு ஒரு கொஞ்சமும் மதிப்பும் மரியதையயும் இல்லாத நிலையே எதிர்காலத்தில் ஏற்படும்.

# இன்னும் எவ்வளவு நாளைக்கு ரணிலின் ஆட்டம் தொடரும்?

உபுல் யோசப் பெர்னான்டோ



ரணில் ஜனாதிபதியான பின்னர் 'அரகலய' போராட்டத்தை அடக்கிய விதம் அமெரிக்காவை ஈர்க்கவில்லை. அதனால்தான், ரணிலுக்கு அமெரிக்கா நண்பராக இருந்தும் அவர் ஜனாதிபதியானதற்கு அமெரிக்க அதிபர் வாழ்த்துத் தெரிவிக்கவில்லை. ஆனால் ரணில் ஜனாதிபதியானது முதல் அமெரிக்கா காட்டிய காத்திருப்பு அணுகுமுறை அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பதில் பிரதிச் செயலாளர் விக்டோரியா நூலன்ட்டின் இலங்கைப் பயணத்தின் பின்னர் மாறியது. அவர் ரணிலின் ஆட்சியைப் பற்றி வோஷிங்டனுக்கு நல்லதான செய்திகளைக் கொடுத்தார் மற்றும் சீனாவைத் தாக்கினார். அவர் பெப்ரவரி 2023 இல் இலங்கைக்கு வந்தார். சிஐஏ தலைவர் மார்ச் மாதம் இலங்கைக்கு வந்தார். ரணில் காத்திருந்த சர்வதேச நாணய நிதியம் அதன் பின்னரே வந்தது. அது ரணிலை அரசியல் ரீதியாகப் பலப்படுத்தியது.



அமெரிக்காவுக்கும் ரணிலுக்கும் இடையில் உறவுகள் சூழ கப்பட்டு வந்த இந்த நிலையில், ரணில் சட்ட விரோதமாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைத்தார். அமெரிக்கா அதைப் பற்றி வாய் திறக்கவில்லை. இலங்கையில் ரணில் தலைமையிலான அடக்குமுறை ஆட்சி இருந்தும் அமெரிக்கா அது குறித்துக் கவலை தெரிவித்து எந்த அறிக்கையும் வெளியிடவில்லை. இதன் மூலம் அமெரிக்காவின் ஆதரவு தனக்கு இருப்பதாக ரணில் இலங்கை மக்களுக்குக் காட்டினார். ஊடகங்கள் மூலம்கூட சி.ஐ.ஏ. அவரை அரசியல் ரீதியாக பாதுகாத்து வருகிறது என்று எழுதுவித்தார்.

ரணில் சொன்னது உண்மையோ இல்லையோ, ஆனால் அவர் சொன்னதையெல்லாம் மறுத்துப் பேசாமல் அமெரிக்கா காத்திருந்ததற்கு ஒரு காரணம் இருந்தது. இலங்கையில் சீனாவின் செல்வாக்கை ரணில் ஒழிப்பார் என்று அமெரிக்கா நம்பியதுதான் அந்தக் காரணம். அந்த நம்பிக்கையை ரணில் அமெரிக்காவுக்குக் கொடுத்தார்.

இதற்கிடையில், அவர் சீனாவுக்கும் நம்பிக்கை அளித்தார். 2015-2019இல் அவர் பிரதமராக இருந்த காலத்தில் நாடு தழுவிய எதிர்ப்பையும் மீறி அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு விட்டார், 2015 தேர்தலின்போது கொழும்பு துறைமுக நகரை ஒழிப்பதாக அவர் உறுதியளித்திருந்த போதிலும் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் அவர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. பதிலாக துறைமுக நகரத்தை நிதி நகரமாக மாற்றி அங்கீகரித்து தொடர்ந்து செயற்படுத்த இடமளித்தார்.

ரணிலை நம்பி ஜஎம்எப் வசதியைப் பெறுவதற்கு சீனா உதவியது. ஆனால் சீனா அமெரிக்காவைவிட தந்திரமாக இருந்தது. ரணிலை அவ்வப்போது சோதனை செய்யத் தமது ஆய்வுக் கப்பல்களை (இவை உளவுக் கப்பல்கள் என்று அமெரிக்காவும் இந்தியாவும் சொல்கின்றன) அனுப்பியது. இந்தியாவும் அமெரிக்காவும் எதிர்ப்பு தெரிவித்த போதும் ரணில் இந்தக் கப்பல்கள் இலங்கைக்கு வர அனுமதித்தார். இப்போது சீனாவிடமிருந்து கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை ரணில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில் ஒரு புதிய ஆராய்ச்சிக் கப்பலை அனுப்ப சீன முடிவு செய்துள்ளது. இந்த கப்பல் வருவதற்கு ரணில் கொடுத்த அனுமதியால், அமெரிக்கா கலக்கமடைந்தது. இலங்கைக்கு வந்து ரணிலைப் பாராட்டிய விக்டோரியா நுலண்ட், அமெரிக்காவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்து இந்தக் கப்பல் குறித்து கேள்வி எழுப்பினார்.

இப்போது ரணில் சிக்கியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அவர், சீனாவுக்கு எதிராக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் செய்து கொண்ட 'ஆக்கஸ்' ஒப்பந்தத்தை கடுமையாகத் தாக்கினார். இது தேவையற்ற ராணுவக் கூட்டணி என்றார். சீன ஊடகங்கள் இதற்கு பெரும் விளம்பரம் கொடுத்தன. ஆனால் ரணில் தந்திரசாலி, அவர் அமெரிக்காவில் அப்படியொரு அறிக்கையை விடுத்துவிட்டு சீன கப்பலுக்கு நிபந்தனைகளை விதித்தார். ஒக்டோபரில் வர வேண்டிய சீனக் கப்பல் நவம்பரில் வரும் வகையில் அதன் பயணத் திட்டம் மாற்றப்பட்டது. ஒக்டோபர் மாதம் சீனா செல்லவுள்ள ரணில், கடன் மறுசீரமைப்பு மற்றும் சீனக் கப்பலை அனுமதிப்பது தொடர்பாக சீனாவின் பதிலை எதிர்பார்த்திருக்கிறார். சீனக் கப்பலின் நுழைவை தாமதப்படுத்துவதன் மூலம், பாரிஸ் கிளப், ஜப்பான் மற்றும் இந்தியாவுடனான கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களை இறுதி செய்ய முடியும் என்று அவர் நினைக்கிறார்.



ஆனால் சீனா இந்தக் கப்பலை வைத்து ரணிலை சோதிக்கப் போகிறது. இந்தக் கப்பலில் அமெரிக்காவும் இந்தியாவும்கூட ரணிலை சோதிக்கப் போகின்றன. ரணில், அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், சீனாவை மிஞ்சி ஓராண்டு காலம் அதிபராக இருந்தார். இப்போது அமெரிக்கா, சீனா, இந்தியா ரணிலை மிஞ்சத் தொடங்கியுள்ளன. இந்த நியைல் இன்னும் எவ்வளவு காலம் அவர் பதவியில் நீடிக்கிறார் என்று பார்க்கலாம்.



காலைக்கதிர் Kalaikkathir

# பாடசாலை மதிய உணவுத் திட்ட பயனாளிகள் எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி இல்லை

## அமைச்சரவை அனுமதித்து ஒரு வருடமாகியும் அசண்டை

போஷாக்கு குறைபாடுள்ள பிள்ளைகளுக்கான பாடசாலை மதிய உணவு திட்டத்தினுள் உள்வாங்கப்படுபவர்களின் எண்ணிக்கையை 20 லட்சமாக அதிகரிப்பதற்குக் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் அமைச்சரவை அனுமதி வழங்கியபோதும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே போஷாக்குக் குறைபாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற போதிலும் அமைச்சரவைத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு எந்தத் திட்டத்தையும் தயாரிக்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:



இலங்கையில் பாடசாலைகளில் கல்வி கற்கும் 43 இலட்சம் மாணவர்களில் 11 இலட்சம் மாணவர்களுக்கே தற்போது மதிய உணவு வழங்கப்படுகின்றது. இந்த எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்கவேண்டும்.

பாடசாலை மாணவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான புரதச்சத்துகுறைபாடு இருந்தால் அறிவாற்றல் வளராது, நாட்டின் எதிர்காலம் பாதிக்கப்படும். இந்தப் பிரச்னையைத் தீர்க்க தற்போதைய ஆட்சியாளர்களிடம் எந்தத் திட்டமும் இல்லை.அரச பாட சாலை களில் சத்துணவு திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்ட 100 ரூபாயில் இருந்து 15 ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் அரிசி பெறப்பட்டுள்ளதாகக் கூறி இந்தத் தொகை குறைக்கப்பட்டுள்ளது - எனத் தெரிவித்தார்

இதேவேளை, 2024ஆம் ஆண்டு பாடசாலை மதிய உணவு போக்கு திட்டத்திற்கு தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையை 22 இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிதுள்ளார்.

உலக உணவுத் திட்டம், சர்வதேச அபிவிருத்திக்கான யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏஜென்சி, சேவ் தி சில்ட்ரன், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் பாடசாலை மாணவர்களுக்கான ஊட்டச்சத்து திட்டத்திற்கு ஆதரவளிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# அதிக பால், அதிக இறைச்சியை தரும் ஆடு, மாடுகளைக் கண்டறிய ஆய்வு

## அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவு

இலங்கையின் தட்ப வெப்ப சூழலுக்கு ஏற்ப அதிக பால், அதிக இறைச்சியை வழங்கக்கூடிய இரண்டு வகை ஆடுகள் மற்றும் மாடுகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகளை மேற் கொள்ளும்படி விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பால் மற்றும் இறைச்சி உற்பத்திக்காக தற்போது பசு, ஆடு போன்ற விலங்குகள் இறக்குமதி செய்யப்படுகின்ற போதிலும், நாட்டின் காலநிலைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் அவை நோய்த் தாக்கத் திற்கு உள்ளாகின்றன. இதனால் அந்த விலங்குகள் உயிரிழக்கின்றன என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். அதன்படி, பொதுவாக இதுபோன்ற ஆய்வுகளுக்கு ஐந்து தொடக்கம் ஏழு ஆண்டுகள் எடுக்கும் என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் விவசாய அமைச்சரிடம் தெரிவித்தனர். இதேவேளை, தற்போது கிழக்கு மாகாணத்தில் வெள்ளை மாடுகளைப் பயன்படுத்தி புதிய வகை கால்நடைகளை அடையாளம் காணும் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகாரி கள் தெரிவித்தனர்.

கொட்டுகச்சி எனப்படும் ஆடு இனம் தொடர்பாக மேலும் ஆய்வுகள் நடைபெற்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# இரண்டு சிறார்களுக்கு நிபா வைரஸ் தாக்கம் என்பது முழுப் பொய்

நிபா வைரஸால் பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்கள் கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

நிபா வைரஸ் தொற்று இருப்பதாக சந்தேகிக்கப்படும் எவரும் இதுவரை நாட்டின் எந்தப் பகுதியிலும் கண்டுபிடிக்கப்படவில்லை என வைத்தியசாலை இயக்குநர் வைத்தியர் ஜி.வீரசூரிய தெரிவித்தார்

வைரஸ் நாட்டிற்குள் நுழைந்தால், அது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க சுகாதாரத் துறை தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். எனவே, சிகிச்சைக்காக வைத்தியசாலைகளுக்கு வருவதற்கு மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என வைத்தியர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் நிபா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் கண்டறியப்பட்டதை தொடர்ந்து இந்தியா முழுவதும் இந்த வைரஸ் தொடர்பிலான விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருவதுடன், தமிழ்நாடு உட்பட கேரளாவுக்கு அண்டைய மாநிலங்களில் எல்லை மற்றும் சுகாதார பாதுகாப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

அதேபோல் இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் நிபா வைரஸ் பரவாதிருக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர்
Kalaikkathir

# வரிகள் இன்னும் அதிகரிக்கும்

## ஜேவிபி எம்.பி. விஜித ஹேரத் ஆரூடம்



பொருளாதார மீட்சி என்ற பெயரில் இந்த ஆட்சி முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேசநாணய நிதியம் இன்னும் மகிழ்ச்சியடையவில்லை என்பதால் அதனை மகிழ்விக்க அடுத்த ஆண்டு மக்கள் மீது மேலும் வரி சுமைகளை இந்த ஆட்சி சுமத்தும் என மக்கள் விடுதலை முன்னணியின் பரப்புரைச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

விளக்கமாகக் கூறுவதென்றால், சர்வதேசநாணய நிதியத்தின் நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை. எனவே இனியும் வரிகள் அதிகரிக்கும். இதனடிப்படையில் தற்போது நாட்டைவிட்டு வெளியேறி வரும் தொழிசார் நிபுணர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தால் பல்வேறு தொழிற்நுட்ப விடயங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் வரி அறவீடுகளை அதிகரிக்குமாறே சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தொடர்ந்தும் வலியுறுத்தினர்.

அதற்கமைய மின்கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. சமையல் எரிவாயு விலைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இவற்றின் மூலம் பணம் சம்பாதிக்கப்பட்டுள்ள போதிலும் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை.

இந்த நடவடிக்கை மக்களுக்கு சுமை என்பதை சர்வதேச நாணய நிதியம் ஏற்றுக்கொள்கிறது. ஆனால் அதுதான் தேவை என்கிறது அது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே இந்த ஆட்சியின் பொருளாதார, அரசியல் கொள்கைகள் என அனைத்தும் தீர்மானிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் மத்திய வங்கி, ஊழல் எதிர்ப்புச் சட்டம் என்பன நிறைவேற்றப்பட்டாலும் சர்வதேச நாணய நிதியம் திருப்தியடையவில்லை என்பதை காணக் கூடியதாக உள்ளது. அவர்கள் பச்சிளம் குழந்தைகள் அல்ல. அவர்களை ஏமாற்ற முடி யாது. குறிப்பாக ஊழல் எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டாலும் ஊழல் நின்றபாடில்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.

மத்திய வங்கியின் சட்டமூலம் கொண்டு வரப்பட்ட போதிலும் அதன் நடவடிக்கைகள் இன்னும் சுயாதீனமாக்கப்படவில்லை.

இதனால், நெருக்கடிக்குள்ளாகும் இந்த ஆட்சி எதிர்பார்த்த வருமானத்தை ஈட்ட வேண்டுமாயின் கட்டாயம் வரிகளை மேலும் அதிகரிப்பதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை - என விஜித ஹேரத் மேலும் கூறியுள்ளார்.

# மொட்டுக் கட்சியின் பெண்கள் பிரிவு அலுவலகம் இழுத்து மூடப்பட்டது

## நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் வந்த வினை

சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் இருக்கும் பெண்கள் அமைப்பின் அலுவலகம் மூடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அந்த அலுவலகத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்ஒருவர்அங்கிருந்தவர்கள் மோசடிகளில் ஈடுபடுகின்றனர், முறையாகச் செயற்படுகின்றனர் இல்லை என்று தெரிவித்து அத்துமீறி நடந்ததை அடுத்து அந்த அலுவலகம் மூடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

கட்சியின் பெண்கள் அமைப்பின் தொடக்க கால உறுப்பினரும் அந்த அலுவலகத்தின் பொறுப்பாளருமான பெண் அலுவலகத்தைவிட்டு வெளியேறியதைத் தொடர்ந்து அங்கிருந்த அனைத்துப் பெண்களும் வெளியேறியதனால் அலுவலகம் முற்றாக மூடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்த அலுவலகத்திற்கு வருகை தந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அலுவலகத்திற்குள் சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் இடம்பெறுவதாகக் குற்றஞ்சாட்டியதுடன் அலுவலகத்தில் இருந்த ஆவணங்களையும் தம்மோடு எடுத்துச் சென்றுள்ளனர்.

அப்போதுகட்சியின்பெண்கள்பிரிவு அலுவலர்கள் அங்கிருந்துள்ளனர். இரு தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. சண்டை முற்றிய நிலையில் தான் இனி கட்சிக்கு திரும்பப் போவதில்லை என்று தெரிவித்துவிட்டு பெண்கள் பிரிவுப் பொறுப்பாளர் அங்கிருந்து வெளியேறியுள்ளார். இதையடுத்து ஏனையவர்களும் அலுவலகத்தை மூடிவிட்டுச் சென்றுவிட்டனர்.

இதன் காரணமாக பத்தரமுல்லை நெலும் மாவத்தையில் உள்ள பொது ஜனபெரமுனவின் தலைமையகத்தில் இருக்கும் பெண்கள் அமைப்பின் அலுவலகமும் பூட்டுப் போட்டு மூடப்பட்டுள்ளது.

# ராஜபக்ஷவினர் மீது சேறு பூசுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியாம்



ராஜபக்ஷவினருக்கு எதிராகச் சேறுபூச மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன பெரமு-னவின் தலைமையகத்தில் நடைபெற்றசெய்தியாளர்சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

தேசிய புலனாய்வுச் சேவையின் பிரதானி சுரேஷ் சாலே மற்றும் சஹ்ரான் இடையில் தொடர்பு இருந்தது என்ற செய்தி அனைத்து ஊடகங்களிலும் பிரதான தலைப்புச் செய்தியாகக் காணப்பட்டது.

அதனைப் பெரிதுப்படுத்திக் கோம் போடுகின்றனர். குற்றச்சாட்டை எதிர்நோக்கும் தரப்பினர் பிரச்சினையை எங்கள் பக்கம் திசை திருப்ப பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இறுதியில் கோட்டாபய ராஜபக் ஜனாதிபதியாக பதவிக்கு கொண்டு வரவும் மொட்டுக்கட்சியின் ஆட்சியை அமைக்கவும் ராஜபக்ஷ-வினர் செய்த வேலை இது எனச் சித்திரிக்கப் பலர் முயற்சித்தனர்.

ராஜபக்ஷவினர் மீது சேறுபூச வேண்டும் என்பதே இவர்களது எதிர்பார்ப்பு. இதேபோலவே அனைத்தையும் ராஜபக் வினர் பக்கம் திசைத்திருப்பி ராஜபக்ஷ வினரைத் தாக்க முயற்சிக்கின்றனர். ராஜபக்ஷவினர் காரண மாக நாம் தற்போது மூச்சு விடுகின்றோம். அவர்கள் காரணமாகவே நாட்டில் சமாதானம் ஏற்பட்டது. மகிந்த ராஜபக்ச இருக்கவில்லை என்றால், சனல் 4 தொலைக்காட்சி தனக்கு தேவையானவற்றை செய்-துக்கொண்டிருக்கும். சனல் 4 தொலைக்காட்சி அந்தக் காலத்தில் எப்படிநடந்துக்கொண்டதுஎன்பதை நாம் அறிவோம். பல்வேறு விதமாக தவறான தகவல்களை முன்வைத்து ராஜபக்ஷவினர் மீது குற்றம் சுமத்தும் தேவை அந்த தொலைக்காட்சிக்கு இருந்தது-என்றார்.

# காரைநகர் கடற்கரையில் 125 கிலோ கஞ்சா சிக்கியது

## சந்தேகநபர் ஒருவரும் கைது

யாழ். மாவட்டம், காரைநகரில் 125 கிலோ கேரளா கஞ்சாவுடன் வியாழக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று கடற்படையினர் தெரிவித்தனர். மேலும் பலர் தப்பி சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடலில் இரவு நேரம் சந்தேகத்திற்கு இடமான படகின் நடமாட்டத்தை அவதானித்த கடற்படையினர் அந்தப் படகைச் சோதனையிட முயன்றனர். படகிலிருந்தவர்கள் தப்பியோடினர்.

அவர்களை விரட்டிச் சென்ற கடற்படையினர்ஒருவரைமடக்கிப்பிடித்தனர். படகைச்சோதனையிட்டபோது, படகில் மூன்று உரைப்பைகளில் கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டது.

மீட்கப்பட்ட கஞ்சாவின் தொகை சுமார் 125 கிலோ கிராம் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

# வாதுவையில் பெண்கள் பலரை ஏமாந்றி பாலியல் கொடுமை செய்த சிப்பாய் கைது



வாதுவ பிரதேசத்தில் மசாஜ் நிலையங்கள் மற்றும் பேஸ்புக், இணையம் மூலம் அறிமுகமான பெண்களை ஏமாற்றி அவர்களை அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்து அவர்களிடமிருந்து தங்க நகைகளைக் கொள்ளையடித்து வந்தார் என்று நம்பப்படும் இராணுவத்தின்முன்னாள்சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிப்பாய், தன்னை தன்னை பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றும் அதிகாரி என்று போலி அடையாளஅட்டையைக் காட்டிப் பெண்களை நம்பவைத்து இந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டு வந்தார்என்றுபொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கைது செய்-யப்பட்ட சந்தேகநபர் பண்டாரகம, மில்லனியம் பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 53.

# உன்நாட்டு தொழில் கட்டமைப்பு முற்றாகச் சிதைவு இந்நிலையில் இந்தியாவுடன் ஒப்பந்தம் வேண்டாம்

## உத்தர லங்கா கூட்டமைப்பு வலியுறுத்து

அதிகரித்துள்ள கடன் வட்டி விகிதங்கள், மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்கள் உட்பட எரிசக்தி விலை அதிகரிப்பு, எரிவாயு விலை அதிகரிப்பு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் வீழ்ச்சி, வரி அதிகரிப்பு ஆகிய காரணிகளால் இலங்கையின் உள்நாட்டு தொழில் கட்டமைப்பு முழுமையாகச் சிதைந்துள்ளது. இந்த நிலையில் இந்தியாவுடன் எட்கா (சிவீஎீபு) ஒப்பந்தத்தில் (பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம்) கையெழுத்திட்டால், உள்ளூர் உற்பத்தியார்களும் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள் என உத்தர லங்கா கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பொரளையில்உள்ளகம்யூனிஸ்ட்கட்சியின் தலைமையகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த உத்தர லங்கா கூட்டமைப்பியின் தேசிய செயற்குழு உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டில் உள்ள உள்நாட்டுக் கைத்தொழில் கட்டமைப்புக்கு எந்தவிதமான பாதுகாப்பு வேலைத்திட்டமும் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதை கடுமையாக எதிர்க்கின்றோம். உள்ளூர் தொழில்களின் சரிவு மற்றும் பொருட்களின் ஏற்றுமதிச் சரிவு காரணமாக கடந்த 30 ஆண்டுகளாக சராசரியாக 10-12 பில்லியன் டொலர் மதிப்பில் பராமரிக்கப்பட்டு வரும் இந்நாட்டின் ஆண்டு ஏற்றுமதிவருமானம்வெகுவாகக்குறையலாம்.

தொழில் வல்லுநர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் இடதுசாரி முற்போக்கு அரசியல் கட்சிகளின் கடும் எதிர்ப்பினால் சில காலமாக கைச்சாத்திட முடியாமல் போன எட்கா உடன்படிக்கையைமீளக்கொண்டுவருவதற்கு ஆட்சியாளர்கள் மேற்கொண்டுள்ள ஆயத்தங்களை எதிர்க்கின்றோம்.

நாளுக்கு நாள் உள்ளூர் தொழில்கள் சரிந்துவரும் நேரத்தில் எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால்இந்தியதொழில்துறைகள் மட்டுமின்றி, இந்தியத் தொழிலாளர்களும் நாட்டின் சேவைப் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் ஊடுருவ முடியும். இது எமது நாட்டு தொழிலாளர்களையும் தொழில்துறையையும் பெருமளவில் பாதிக்கும் -என்று அவர் மேலும் தெரிவித்தார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## இரு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைகளினால் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், சட்டவிரோத கைதுகள், காணி அபகரிப்புடன் கூடிய பௌத்த மயமாக்கல், உயிர் அச்சுறுத்தல், இன அழிப்பிற்கான நீதி கோருதலில் அனைத்துலக கவனம் போன்ற பலவிடயங்கள் தெளிவாக புள்ளி விவரங்களுடன் எடுத்துரைக்கப்பட்டன. பின்லாந்து அரச பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில், இவ்விடயம் தொடர்பாக தங்களுடைய வரையறைக்குட்பட்டுத் தங்களால் ஆற்றக் கூடிய பங்களிப்பை தாங்கள் செய்வோம் எனக் கூறினார்கள்.

## யாழ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் கட்டளையாக்கியிருந்தது. அவ்வாறிருக்க இத் தீர்ப்பினை மாற்றியெழுத சட்டமா அதிபரினால் நீதிபதிக்கு அழுத்தம் கொடுக்கப் பட்டிருந்ததுஎனும்செய்தியை ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாகவிருந்தது

குருந்தூர்மலை வழக்கு மற்றும் கொக்குத் தொடுவாய்மனிதப்புதைகுழி விவகாரங்களில் நீதியை நிலைநாட்ட உறுதித்தன்மையோடிருந்தநீதிபதியை "தமிழ் நீதிபதி" என்றுஅடையாளமிட்டு நாடாளுமன்றத்தில் விமர்சிக்கும்பொழுதே சிறிலங்கா நீதித்துறையின் சுயாதீனம் விமர்சனத்திற்குள்ளாகிவிட்டது. அதேவேளை நீதிபதிக்குரிய பொலிஸ் பாதுகாப்பு குறைக்கப் பட்டதோடு, அவர் சிறிலங்கா புலனாய்வாளர்களால் கண்காணிக்கப்பட்டார்எனும் செய்தியானது அப்பட்டமாக நீதித்துறையின்சுயாதீனத்தை கேள்விக்குள்ளாக்கியதோடு, நீதியையும் கேலிக்குரிய தொன்றாக்கியுள்ளது.

சிறீலங்காவில்நடந்தேறிய இச்சம்பவங்கள்நீதித்துறைச் சுயாதீனத்தில்ஒருஅங்கமான நீதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் கேள்வியினை தோற்றுவித்துள்ளதோடு, நீதிமன்றச்செயற்பாடுகளில் அரசியல் மற்றும் புறக் காரணிகளின் அழுத்தம் தொடந்தும் இருக்கின்றமையினையும் உறுதி செய்கின்றது.

தமிழ்மக்களைப்பொறுத்தவரையில் இச் சம்பவம் ஒரு விடயத்தினை சந்தேகத்திற்கிடமின்றி தெளிவுபடுத்துகின்றது, அதாவது தமிழ் மக்கள் மீது நடந்த இனப்படுகொலைக்கான நீதி சிறீலங்கா நீதித்துறையால் சாத்தியப்படாது என்பதே அதுவாகும். இலங்கையின் உள்ளகவிசாரணையையும் நீதிப் பொறிமுறையையும் தமிழ் மக்கள் நம்பமுடியாது என்பதை இது உறுதி செய்கின்றது, இனப்படுகொலைக்கான சர்வதேச நீதிக்கு இது மேலும் வலுச் சேர்க்கின்றது.

இங்கு தமிழ் மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்பை விட, நீதித்துறைக்கு பெரும் அநீதி நிகழ்ந்துள்ளது. இவ்வாறான சூழலில்தான் சிறிலங்கா அரசு உலக நம்பிக்கையை வென்றெடுக்கப்போகின்றது. இங்கு தனிப்பட்ட ரீதியில் அச்சுறுத்தலுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட நீதிபதி ரி.சரவணராஜாவிற்குரிய நீதியையும்நிவாரணத்தையும் வழங்க, நீதித்துறையில் சுயாதீனத்தன்மையினையும் நம்பகத்தைன்மையையும் உறுதிசெய்ய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்வலியுறுத்துகின்றது - என்றுள்ளது.

## வரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றது. அதன் ஊடாகவே பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில் தாம் செலுத்தும் வரி உரிய முறையில் பயன்படுத் தப்படுகின்றதாஎன்பதற்கான சந்தேகம்ஆரம்பத்திலிருந்தே பொதுமக்களுக்கு காணப்படுகின்றது.

தற்போதைய நிலையில் நிதியை முகாமை செய்து வரியைக் கட்டுப்படுத்த வேண்டிய தருணத்தினை நாம் எதிர்கொண்டுள்ளோம். அதனடிப்படையில் பொது மக்களின் சகல வரிவருமானத்தையும் சரியான முறையில் பயன்படுத்துவதற்கு அரசு சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது. ஆகவே பொதுமக்களும் வரி செலுத்தும் பொறுப்பை சரியான முறையில் சகல சந்தர்ப்பங்களிலும் நிறைவேற்ற வேண்டும் - என்றார்.

## கடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் நெருக்கடிகளை விடவும்கடன்தொகைக்கான முக்கியத்துவம் அளிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் கடன்தொகை பெறப்பட்டு மக்களுக்க நிவாரணமாக வழங்கப்படவுள்ளது. அஸ்வெசும போன்ற நலத்திட்டங்களே முன்னெடுக்கப்படவுள்ளன.

இறுதில் தேசமாக முன்னேற்றப்படாத நிலைமை தான் நீடிக்கப்போகின்றது. இந்த நிலைமையை அனுமதிக்க முடியாது.

கடன் வாங்குவதும் உண்பதுமாக இருந்தால் இன்னமும் பத்து ஆண்டுகளால் உண்பதற்கான நிலைமைகள்கூட இருக்க முடியாது போகும் - என்றார்.

# நாணய நிதியத்தின் நிபந்தனையால் அரச நிர்வாக ஊழலைத் தடுக்கலாம்

## உதய கம்பன்பில தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையைநிறைவேற்றினால், அரச நிர்வாகத்தில் இடம்பெறும் ஊழலைத் தடுக்க முடியும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மஹரகம பகுதியில் வியாழக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரை யாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசின் கொடுக்கல், வாங்கல்களை உள்ளடக்கிய சகல தகவல்களையும் பொது வலைத்தளத்தில் வெளிப்படையாகப் பகிரங்கப்படுத்தவேண்டும் எனச் சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனையை ஆட்சியாளர்கள் செயற்படுத்த வில்லை.

இந்த நிபந்தனை நிறைவேற்றப் பட்டால் அரச நிர்வாகத்தில் நிலவும் ஊழலைப்பகுதியளவேனும்குறைத்துக் கொள் எலாம்.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முழு உலகத்தையும்வலம்வருகிறார். ஆனால் பொருளாதார பாதிப்புக்கு இதுவரை தீர்வு எட் டப்படவில்லை.

ரணில் விக்ரமசிங்க ஆட்சிக்கு வந்தவுடன் எரிபொருள்,எரிவாயு ஆகிய சேவைக் கட்டமைப்பு வழமைக்கு திரும்பியுள்ளன என ஆளும் தரப்பினர் புகழ்கின்றனர். இது நாட்டு மக்களை ஏமாற்றும் ஒரு செயற்பாடு.

2022 வெளிநாட்டு கடன் களைச் செலுத்தியநிலையில்எரிபொருள்,எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன.

2022 ஏப்ரல் மாதமளவில் வெளிநாட்டு கடன்களை செலுத்த முடியாது,இலங்கை வங்குரோத்து நிலை அடைந்துவிட்டதுஎனஆட்சியாளர்களால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட் டது.

கடந்த ஒன்றரை வருட காலமாக வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பி செலுத்தாமல் அந்த நிதியை கொண்டே எரிபொருள்,எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

வெளிநாட்டுக்கடன்களைத்தொடர்ந்து செலுத்தாமல் இருக்க முடியாது. கடன் பெறுவதையே பிரதான பொருளாதார கொள்கை யாக இன்றைய ஆட்சி கருதுகிறது.

சர்வதேசநாணயநிதியத்திடமிருந்து கடன் பெறுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளும் தற் போது தோல்வியடைந்துள்ளது.

கடன்மறுசீரமைப்பில்முன்னேற்றம் இல்லாத காரணத் தால் இரண்டாம் தவணை கடன் வழங்கல் தொடர்பில் இன்னும்தீர்மானிக்கப்படவில்லைஎன சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேசநாணயநிதியம்முன்வைத்த நிபந்தனைகளைநிறைவேற்றியுள்ளதாக ஆட்சி யாளர்கள் குறிப்பிடுவது அடிப்படையற்றது - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும் அழுத்தம் கொடுப்போம் என்கிறது பெரமுன

இன்றைய ஆட்சியாளர்கள் உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும். தேர்தலை நடத்த நாம் அழுத்தம் கொடுப்போம் என பொது ஜன பெரமுனவின் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் பொது ஜன பெரமுன தலைமையிலான ஆட்சியைத் 2019இல் தோற்றுவித்தார்கள். ஆனால் எமது ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச எடுத்த தவறான தீர்மானங்களினால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

முன்னாள் அதிபர் கோட்டபய ராஜபக்ச பொது ஜன பெரமுனவின் கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டதால் அரசியல் ரீதியில் நெருக்கடிகள் தோற்றம் பெற்றது. பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

பொருளாதாரப் பாதிப்பை கொண்டு ஒரு தரப்பினர் நாட்டைப் பலவீனப்படுத்த முயற்சித்தார்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டை உறுதிப்படுத்தவேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தோம்.

பொருளாதார பாதிப்புக்குதீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறைக்குச் சாத்தியமான எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நாங்கள் தெரிவு செய்துள்ளோம் என்பதற்காக அவர் எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் எம்மால் இணக்கம் தெரிவிக்க முடியாது. தவறான தீர்மானங்களுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது.

இப்போது இந்த ஆட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. ஆகவே ஆட்சியாளர்கள் உடனடியாகத்தேர்தலைநடத்தவேண்டும். பொருளாதாரப் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது.

மக்களாணையைத் தெரிந்துகொள்ள ஆட்சியாளர்கள் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும்.தேர்தலை நடத்துமாறு அரச தலைவர்களுக்குக் கட்டாயம் அழுத்தம் கொடுப்போம் -என்றார்.



# மகளின் குடும்பச் சண்டையில் தலையிட்ட தந்தை கொலை

## மினுவாங்கொடையில் சம்பவம்

மகளின் குடும்பச் சண்டையில் தலையிடச் சென்ற 74 வயது முதியவர் அடித்துக் கொல்லப்பட்டார் என்று மினவாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொடை அளுதே பொலவில் வியாழக்கிழமை இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

இறந்தவரின் மகள் முதல் திருமண பந்தத்தில் இருந்து பிரிந்து வேறு ஒருவருடன் வாழ்ந்து வருகிறார். இந்த நிலையில் இருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்ட சமயத்தில் மகளின் உதவிக்காகச் சென்ற தந்தையின் தாக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த அவர், கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவரைக் காப்பற்ற முடியவில்லை.

# நாடு திரும்புகிறார் தனுஷ்க குணதிலக

அவுஸ்திரேலியாவில் பெண் ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக குற்றச்சாட்டுக்களில் இருந்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பவுள்ளார்.

வழக்கு முடியும்வரை ஆஸ்திரேலியாவிலேயே இருக்கவேண்டும் என்று நீதிமன்றம் நிபந்தனை விதித்திருந்ததால் அங்கேயே தங்கியிருந்த அவர், வழக்கு முடிந்ததைத் தொடர்ந்து நாடு திரும்பவுள்ளார். அவர் நாடு திரும்பியதும் அவர் மீதான தற்காலிகத் தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்க இலங்கை கிரிக்கெட் சபை தயாராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிட்னியில் உள்ள டவுனிங் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தால் தனுஷ்க வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டார். அவர் நவம்பர் 3 நாடு திரும்புகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தனுஷ்க குணதிலகவின் வழக்குக்காக செலவிடப்பட்ட பணம் அனைத்தும் அவரிடமிருந்து தற்போது வசூலிக்கப் பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

வழக்கின் தீர்ப்பை அறிவித்த நியூ சவுத் வேல்ஸ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி சாரா ஹகெட், சர்வதேச கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலகவை அவதூறு செய்யும் வகையில் மனுதாரருக்கு ஏதோ ஒரு உள்நோக்கம் இருந்துள்ளதாக தெரிவித்தார்.



# உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும் அழுத்தம் கொடுப்போம் என்கிறது பெரமுன

இன்றைய ஆட்சியாளர்கள் உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும். தேர்தலை நடத்த நாம் அழுத்தம் கொடுப்போம் என பொது ஜன பெரமுனவின் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் பொதுஜனபெரமுன தலைமையிலான ஆட்சியைத் 2019இல் தோற்றுவித்தார்கள். ஆனால் எமது ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச எடுத்த தவறான தீர்மானங்களினால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிட்டது.

முன்னாள் அதிபர் கோட்டபய ராஜபக்ச பொது ஜன பெரமுனவின் கொள்கைக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்பட்டதால் அரசியல் ரீதியில் நெருக்கடிகள் தோற்றம் பெற்றது. பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

பொருளாதாரப் பாதிப்பை கொண்டு ஒரு தரப்பினர் நாட்டைப் பலவீனப்படுத்த முயற்சித்தார்கள். பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டை உறுதிப்படுத்தவேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்தோம்.

பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால் நடைமுறைக்குச் சாத்தியமான எந்தத் தீர்மானங்களும் எடுக்கப் படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நாங்கள் தெரிவுசெய்துள்ளோம் என்பதற்காக அவர் எடுக்கும் சகல தீர்மானங்களுக்கும் எம்மால் இணக்கம் தெரிவிக்க முடியாது. தவறான தீர்மானங்களுக்கு எம்மால் ஒத்துழைப்பு வழங்க முடியாது.

இப்போது இந்த ஆட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதொரு நிலைப்பாடு கிடையாது. ஆகவே ஆட்சியாளர்கள் உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டும். பொருளாதாரப் பாதிப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு தேர்தலை நடத்தாமல் இருக்க முடியாது.

மக்களாணையைத் தெரிந்துகொள்ள ஆட்சியாளர்கள் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்துமாறு அரச தலைவர்களுக்குக் கட்டாயம் அழுத்தம் கொடுப்போம் -என்றார்.

# தற்போதைய நிவாரணங்கள் நிரந்தரமானவையே அல்ல

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



நாட்டு மக்களுக்குத் தற்போது கிடைத்துவரும் நிவாரணங்கள் நிரந்தரமானவை அல்ல என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க விளக்கமளித்துள்ளார்.

வத்தளையில் வியாழக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு இரண்டாவது தவணை கடனை வழங்குவது தொடர்பில் முடிவெடுக்கப்படவில்லை என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் செய்தியாளர் சந்திப்பில் அறிவித்தனர்.

இதற்கு முன்னர் நடந்த கூட்டம் ஒன்றில் செப்டம்பர் 27 சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியமான முடிவு கிடைக்கும் எனக் கூறினேன். அதுவே நடந்துள்ளது.

இந்த வழியில் செல்லுங்கள் என்று சர்வதேச நாணய நிதியம் எமக்கு ஒரு வரைப்படத்தை வழங்கியுள்ளது. நாம் அந்த வழியில் பயணிக்கின்றோம்.

முதலாவது உடன்படிக்கை இந்த மாதத்துடன் முடிவடைகின்றது. அதன் முன்னேற்றத்துடன் நாம் புதிய உடன்படிக்கைக்குச் செல்லவேண்டும்.

அப்போதே சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த தவணை கடன் கிடைக்கும். எனினும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அப்படியான உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படும் என்பதற்கான அறிகுறிகளைக் காண முடியவில்லை.

இரு தரப்புக்கும் இடையிலான பேச்சுக் காலம் நீடிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலத்தில் என்ன நடக்க போகிறது என்பதும் தெளிவில்லை. வருமானத்தை அதிகரிக்குமாறு நாணய நிதியம் ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்கியிருந்தது.

ஆட்சியாளர்கள் வருமானத்தை அதிகரிக்கவில்லை என்றால், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்க முடியாது. இலவசக் கல்வி, இலவச சுகாதாரம், நலன்புரி வசதிகள், சமூர்த்தி, அஸ்வெசும போன்றவற்றைச் செய்ய முடியாமல் போகும். வருமானத்தை அதிகரிக்குமாறு யோசனை முன்வைக்கப்பட்ட போதிலும் எதிர்பார்த்த வருமானத்தில் சுமார் 15 வீதம் கிடைக்கவில்லை.

இதனால், வருமான இலக்கை அடையவில்லை என்ற எச்சரிக்கையை விடுத்ததுடன் தாம் திருப்தியடையவில்லை என்பதை சர்வதேச நாணய நிதியம் கூறியது.

தற்போது வரிசைகள் இல்லை என்றே அனைவரும் நினைப்பார்கள். எரிபொருள் இருக்கின்றது. 24 மணி நேரமும் மின் விநியோகம் கிடைக்கின்றது. எரிவாயு, உரம் கிடைக்கின்றது என்று நினைக்கிறார்கள். எனினும் இந்த நிவாரணங்கள் நிரந்தரமற்றவை என நாணய நிதியம் கூறுகிறது.

நாடு உள்ளுக்குள் சரிந்துவருகிறது. நாட்டின் பொருளாதாரம் படிப்படியாகச் சுருங்கி வருகின்றது. இது சிறந்த எதிர்வுகூறல் அல்ல. சிகப்பு எச்சரிக்கை.

உலகில் எமக்கு கடன் வழங்கிய நாடுகள் உட்பட கடன் உரிமையாளர்கள் எம்மைப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். ஒரு நிறுவனம் வழக்கு தாக்கல் செய்துள்ளது. ஏனையோர் வழக்கு தொடரக் காத்திருக்கின்றனர்.

கடன் உரிமையாளர்களுடன் பேச்சு நடத்தி தீர்வுகாணும் வரை எமக்கு இரண்டாம் தவணை கடன் கிடைக்காது என சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது - என்றார்.

# ஆசாத் மௌலானா சொல்பவற்றில் பெரும்பாலானவை உண்மைகளே

## கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் தெரிவிப்பு கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் தெரிவிப்பு

ஆசாத் மௌலானாவை எனக்கு நன்றாக தெரியும். பிள்ளையானுடன் மிக நெருங்கி செயற்பட்டவர். சனல் 4 காணொளியில் அவர் கூறியிருப்பதை நிராகரித்து விட முடியாது. எனக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் ஆசாத் மௌலானா கூறியவற்றில் பெரும்பாலும் உண்மைத் தகவல்களே உள்ளன.

இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு மாகாண சபையில் நான் சுகாதார அமைச்சராக இருந்தபோது முதலமைச்சராக இருந்த சிவநேசத்துரை சந்திரகாந்தனின் செயலாளராக ஆசாத் மௌலானா செயற்பட்டார். நன்றாகப் பேசக்கூடிய ஒருவர். சமய நிகழ்வுகளில் என்னோடுதான் இணைந்து கொள்வார். சமய கொள்கைகளை கடைப்பிடிக்கின்ற ஒருவர்.

அவர் பொய் பேசுவாரா என்பது எனக்குத் தெரியாது. என்னோடு அவர் அப்படிப் பேசியது கிடையாது. அப்போது முதலமைச்சராக இருந்த பிள்ளையானுடன் மிக நெருக்கமாக இருந்தவர். மிக உதவியாக இருந்தார். அவர்களுக்கிடையில் என்ன பிரச்சினையோ எனக்கு தெரியாது.

பிள்ளையான் சிறையினுள்ளே இருந்தபோது அவரை விடுதலை செய்து வெளியில் கொண்டு வருவதற்கு கடுமையாக உழைத்த ஒரு நபர் ஆசாத் மௌலானா.

இப்போது அவர் சனல் -4 காணொலியில் வெளியிட்டுள்ள விடயங்கள், அவருடைய கருத்துக்களை நான் கேட்கின்றபோது அதில் நிராகரிக்க கூடிய வகையில் எந்தக் கருத்தும் இல்லை.

ஆசாத் மௌலானா சொல்லும் கருத்துக்களையும், நடந்த விடயங்களையும், நான் அறிந்த, கிடைத்த சில விடயங்களையும் வைத்து பார்க்கும் போது அவரது தகவல்களை முழுமையாக நிராகரிக்க முடியாது.

ஆசாத் சொன்ன விடயங்களில் நிறைய உண்மைகள் இருக்கின்றன. அவை குறித்து உடனடியாக விசாரிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுடன் பிள்ளையான் தொடர்புபட்டாரா என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆசாத் மௌலானாவின் கருத்துக்களை வைத்துப் பார்க்கும்போது பிள்ளையானுக் குத் தொடர்பு இருப்பதாகத்தான் படுகின்றது. விசாரணைகளின் மூலம்தான் உண்மை தெரியவரும் - என்றார்.

# சமூக ஊடக தணிக்கை கூடாது மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



சமூக ஊடகங்களை தணிக்கை செய்யக்கூடாது என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் தொடர்பில் கொண்டு வரப்படவுள்ள சட்ட மூலம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சமூக ஊடகங்களைத் தணிக்கை செய்யக்கூடாது. விமர்சனம் செய்யும் உரிமை அனைவருக்கும் உள்ளது. என்னைப் பற்றி எதனையும் கூறட்டும். எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.

இருப்பினும் சமூக ஊடகங்களுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கப்படவேண்டும் என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன, கட்சியின் தலை மையகத்தில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறியிருந்தார்.

# அஸ்வெசும திட்டத்தை தொடங்க முன்னர் வறுமைக் கோடு எதுவென கண்டறியுங்கள்

## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

அஸ்வெசும திட்டத்தைத் தொடக்குவதற்கு முன், நாட்டிலுள்ள ஒரு குடும்ப அலகின் வருமானம் மற்றும் செலவுக் கணக்கெடுப்பு நடத்தி, வறுமைக் கோட்டைக் கண்டறிந்து, ஏழை, எளியவர்களைக் கண்டறிந்து அதைச் செயல்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இங்கு எத்தகைய அறிவியல் நடைமுறைகளும் இன்றி 20 இலட்சம் பேர் தெரிவு செய்யப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி மூலம் வழங்கப்படும் பணம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

இந்த ஆட்சியில் எல்லாமே தலைகீழாகவே நடக்கின்றன. முதலில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யாமல் அஸ்வெசும திட்டத்தை நிறைவேற்றியதால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் முறைமை மாற்றம் வரவேண்டும் என்றும் தரவுகளை மையமாகக் கொண்ட அறிவியல் முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆளும் தரப்பினர் தம்பட்டம் அடித்தாலும், நடைமுறையில் அவை எவையும் இல்லை.

அஸ்வெசும திட்டம் சிறப்பாக இருந்தாலும், அதில் கடுமையான குறைபாடுகளும் சிக்கல்க ளும் உள்ளன. இது தொடர்பில் பல தடவைகள் தடைகளுக்கு மத்தியிலும் நாடாளுமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கின்றேன்.

சமுர்த்திக் கொடுப்பனவு வழங்குவதற்கு முன்பே வறுமைக் கோட்டைக் கணக்கிட்டிருக்கவேண்டும். தரவுகள் மற்றும் தகவல்கள் இல்லாமல் ஏழ்மையான மக்களைத் தெரிவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்படுமாயின் இந்த வேலைத்திட்டம்கூட தவறான வழியில் நடைமுறைப்படுத்தப்படலாம்.

நமது நாட்டில் கிராமப்புற, நகர்ப்புற மற்றும் தோட்டத் துறைகளில் சுமார் 60 இலட்சம் குடும்பங்கள் உள்ளன. இவர்களின் வருமானங்கள் வேறுபட்டவை. இந்தக் குடும்பங்களின் வருமானம் மற்றும் செலவுகளைக் கணக்கிட்டு வறுமையை வரையறுக்க அறிவியல்பூர்வமான முறை உருவாக்கப்பட வேண்டும். கடந்த கால ஆட்சிகள் செய்யத் தவறிய பெரும் தவறு இது - என்று சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2023இல் வெளியிடப்பெற்றது.